01.04.2025 S.C.No.138 of 2017 P.W.19 – Nandhakumar

(A6 absent. And his absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1 to A5 present)

விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.42 P.M.

Crl.M.P.Nos. 836 to 838 of 2025, dated 07.03.2025 மனுக்கள் அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கே: தங்களுக்கு காவல் துறையில் எத்தனை ஆண்டுகள் அனுபவம் உள்ளது என்றால்?

ப: 32 ஆண்டுகள் அனுபவம் உள்ளது.

கே: தங்களுக்கு நிலைய அலுவல்கள் குறித்து நிறைவான அனுபவம் இருக்கும் என்றால்?

ப: சரிதான்.

கே: விசாரணைக்காக அழைத்துவரும் நபரை காவல் நிலையத்தில் வைத்திருக்கும்போது என்னென்ன ஆவணங்களில் பதிவுகள் செய்யப்பட வேண்டும் என்றால்?

ப: பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்பட வேண்டும்.

கே: 16.06.2015 தேதிக்கான பொதுநாட்குறிப்பு பதிவினை பார்த்து யார்யார் நிலையத்தில் விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்தார்கள் என்பது குறித்து பதிவுகள் உள்ளனவா?

ப: பதிவுகள் ஏதும் இல்லை.

கே: அதுபோல 17.06.2015 மற்றும் 18.06.2015 ஆகிய தேதிகளில் யார்யாரை நிலையத்தில் விசாரணைக்காக வைத்திருந்தார்கள் என்பது குறித்து

பொதுநாட்குறிப்பேட்டில் பதிவுகள் உள்ளனவா?

ப: பதிவுகள் ஏதும் இல்லை.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 வரை தங்களது பணி என்னென்ன?

ப: 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் இரவு இருசக்கர வாகனத்தில் ரோந்து பணி. 19.06.2015 ஓய்வு.

கே: வழக்கின் எதிரிகள் 16.06.2015 முதல் 19.06.2015 வரை Special duty ஆக டிஎஸ்பி கணேசன் அவர்களின் மேற்பார்வையில் பணியாற்றினார்கள் என்றால்?

ப: அது பற்றி எனக்கு தெரியாது.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 வரை வழக்கின் எதிரிகளுக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் என்னென்ன பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதனை டியூட்டி ரோஸ்டர் மற்றும் ரப் டியூட்டி ரோஸ்டர் ஆகியவைகளை பார்த்து சொல்லவும் ?

ப: ஆய்வாளர் (1ம் எதிரி)–க்கு ரப் டியூட்டி ரோஸ்டரில் பணி இடம் ஆம்பூர் என எழுதப்பட்டுள்ளது.

கே: அதே ரப் டியூட்டி ரோஸ்டரில் 16.06.2015 தேதியிட்ட பக்கத்தின் இறுதியில் செம்மரம், டிஎஸ்பி எஸ்கார்டு என்றும் 16.06.2015–18.06.2015 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ?

ப: சரிதான்.

கே: 1ம் எதிரியை தவிற மீதமுள்ள வழக்கின் எதிரிகள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு உரியவர்கள் அல்ல என்றால்?

ப: சரிதான்.

கே: 1ம் எதிரி அணைக்கட்டு காவல் நிலையம், பள்ளிக்கொண்டா காவல் நிலையம் ஆகியவற்றிற்கு சர்க்கில் இன்ஸ்பெக்டர் என்றால்?

ப: சரிதான்.

கே: வழக்கின் எதிரிகள் எவரும் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்குரிய டியூட்டி ரோஸ்டரில் என்னென்ன பணிகள் என்பது

குறித்து தகவல்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால்?

ப: சரிதான்.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 வரை காவல் நிலையத்தில் யார்யார் விசாரணைக்காக தங்கவைக்கப்பட்டிருந்தார்கள் என்பது குறித்து ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் VH Mike message / Daily situation report கொடுப்பது வழக்கம் என்றால்?

ப: Control room ல் இருந்து கேட்டால் Daily situation report கொடுக்கப்படும்.

கே: Daily situation report காலையும் மாலையும் கேட்பார்களா என்றால்?

ப: மாலை கேட்பார்கள்.

கே: ஏதேனும் ஆவணங்களில் Daily situation report கொடுப்பது குறித்து பதிவு செய்து வைப்பது வழக்கம் உள்ளதா என்றால்?

ப: குறித்து வைக்கும் வழக்கம் இல்லை.

கே: ஒவ்வொரு நாளும் அந்த Daily situation report Register பராமரிக்கப்பட வேண்டும் என்றால்?

ப: சரிதான்.

கே: 16.06.2015 அன்று தங்களின் பொறுப்பு நிலையம் எது?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலையம்.

கே: 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் ரப் டியூட்டி ரோஸ்டரில் தனி அலுவல் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ?

ப: சரிதான்.

கே: நாமினல் ரோலில் தங்களின் பெயர் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்?

ப: HC 362 TR. நந்தக்குமார் என்று இருக்கிறது.

கே: மேற்கண்ட 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் பிரிகேடியர் என்ற நிலையில் பணி ஒதுக்கப்பட்டுள்ளதால் என்னென்ன பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால்?

ப: இருசக்கர வாகனத்தில் நிலைய எல்லைக்குட்பட்ட இடங்களில்

ரவுண்ட்ஸ் செல்வது, ஏதேனும் குற்ற நிகழ்வுகள் நிகழ்ந்தால் அது குறித்து விசாரிப்பது.

கே: 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் பொதுநாட்குறிப்பில் தங்களது பணி குறித்து பதிவுகள் குறிப்பாக வாகனத்தின் எண் மற்றும் மாடல் ஆகியவை மற்றும் Trip details குறித்து பதிவுகள் ஏதும் செய்யப்பட்டுள்ளனவா என்றால் ?

ப: இல்லை.

கே: தாங்கள் தங்களுக்கென்று தனித்து நோட்புக் பராமரிக்க வேண்டும் என்றால்?

ப: சரிதான்.

கே: மேற்கண்டவாறு தங்களது நோட்புக்–ஐ பராமரித்து அதனை சிபிசிஐடி–ம் கொடுத்தீர்களா?

ப: கொடுக்கவில்லை.

கே: தங்களது பணி குறித்து குறிப்பாக 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் பதிவுகள் ஏதும் பொதுநாட்குறிப்பில் செய்யவில்லை என்பதனை சிபிசிஐடியிடம் கூறினீர்களா?

ப: கூறவில்லை.

கே: 17.06.2015 அன்று இரவு பணி செய்ததாக பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொதுநாட்குறிப்பிலோ அல்லது வேறு ஆவணங்களிலோ ஏதேனும் பதிவுகள் செய்யப்பட்டுள்ளனவா?

ப: ரப் டியூட்டி ரோஸ்டரில் உள்ளது.

கே: 16.06.2015, 17.06.2015 ஆகிய தேதிகளில் ரப் டியூட்டி ரோஸ்டரில் தாங்கள் இரவு பணி செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா ?

ப: இல்லை.

கே: சிபிசிஐடி சொல்லிக்கொடுத்தது போல் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: சிபிசிஐடி விசாரித்தார்களா என்றால்?

ப: விசாரித்தார்கள்.

கே: எழுதிக்கொண்டார்களா?

ப: தட்டச்சு செய்துக்கொண்டார்கள்.

கே: எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால்?

ப: சிபிசிஐடி அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள்.

கே: அதில் கையெழுத்து செய்தீர்களா என்றால்?

ப: இல்லை.

கே: சிபிசிஐடியிடம் தாங்கள் கொடுத்த கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் சிபிசிஐடி அலுவலகத்தில் வைத்து தட்டச்சு செய்துக்கொண்டார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ?

ப: இல்லை.

கே: யார் தட்டச்சு செய்தார்கள் என்ற விவரம் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: 01.07.2015 அன்று ரப் டியூட்டி ரோஸ்டரில் தங்களின் பணி என்னவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்?

ப: Other Duty என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கே: அந்த Other Duty–ல் எங்கே பணியாற்றினீர்கள்?

ப: நினைவில்லை.

கே: அதனால் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் 01.07.2015 அன்று வேறு பணிக்கு சென்றதாக / Other Duty பதிவுகள் உள்ளதால் 01.07.2015 அன்று பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் என்ன நிகழ்ந்தது என்பது உங்களுக்கு தெரியாது என்றால்?

ப: எஸ்கார்டில் எங்கே சென்றேன் என்று எனக்கு நினைவில்லை.

கே: 01.07.2015 இரவு 10.00 மணிக்கு பொதுநாட்குறிப்பில் என்னென்ன பதிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால்?

ப: "விஷேசம் ஏதுமில்லை" என்று பதிவு உள்ளது.

கே: தாங்கள் சிபிசிஐடி சொல்லிக்கொடுத்துபோல் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்திலும் இந்த நீதிமன்றத்தில் கொடுத்த முதல் விசாரணையிலும் பொய் சாட்சி சொல்லியிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

பேரணாம்பேட்டில் சிறப்பு உதவி ஆய்வாளராகத்தான் இருந்தேன். காவல் நிலையத்தில் என்னென்ன Records பராமரிக்கப்பட வேண்டும் என்பது எனக்கு முழுமையாக தெரியும் என்றால் சரிதான். Crime records, Investigation records and Administrative records ஆகியவை தனித்தனியாக பராமரிக்கப்பட வேண்டும் என்றால் சரிதான்.

Administrative records ல் டியூட்டி ரோஸ்டர் மற்றும் ரப் டியூட்டி ரோஸ்டர் ஆகியவை இருக்கும் என்றால் சரிதான். Investigation records–ல் General dairy முக்கிய பங்காற்றும் Case dairy ம் முக்கிய பங்காற்றும் என்றால் சரிதான்.

பிரிகேடியர் பணி என்பது அந்த காவல் நிலையத்தில் இருக்கும் பொறுப்பு அதிகாரி அனுமதியுடன்தான் ஒரு பிரிகேடியரோ அல்லது YB யோ எடுத்துச்செல்ல வேண்டும் என்றால் சரிதான்.

பிரிகேடியர் வண்டியை எங்கு எடுத்துச்செல்கிறாரோ அந்த வாகனத்தின் மீட்டர் ரீடிங் ஆகியவை அனைத்தும் லாக்புக்கில் எழுதுவோம் என்றால் சரிதான். நாங்கள் லாக்புக்கில் உள்ள தகவல்களை அந்த காவல் நிலைய பொறுப்பு அதிகாரியிடம் முறைப்படி தெரிவிப்போம். பின்பு அவர் M.T. Office ல் தகவல் தெரிவிப்பார் என்றால் சரிதான்.

அப்படி நாங்கள் லாக்புக்கில் எடுத்து வரும் செய்திகளை காவல் நிலைய பொறுப்பு அதிகாரியிடம் சொல்வோம் அவர் பொதுநாட்குறிப்பில் எழுதுவார் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் ஒவ்வொரு நாளும் நிகழும் நிகழ்வுகளை எங்களுடைய Station house officer ஜிடீயில் குறிப்பிட்ட அனைத்து விஷயங்களையும் உயர் அதிகாரியான டிஎஸ்பிக்கு தெரிவிப்பார் என்றால் சரிதான்.

16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் நான் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பிரிகேடியராக பணியாற்றியபோது நான் பயன்படுத்திய வண்டி எண், நான் சென்று வந்த இடங்கள் ஆகியவற்றை பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொதுநாட்குறிப்பில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

காவல் நிலையத்தில் வாங்கப்படும் பொருட்களுக்கான Bill, இரசீது ஆகியவற்றை Station house officer யிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் உள்ள யாருக்காவது ஏதேனும் வாங்கிகொடுத்திருந்தால் அதற்கான Bill, இரசீதை ஒப்படைத்திருப்பீர்கள் என்றால் சரிதான். மேற்கண்ட நான்கு நாட்களில் ஏதேனும் பொருள் யாருக்காவது வாங்கிக்கொடுத்ததற்கான Bill, இரசீதோ நிலையத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரிதான்.

சிபிசிஐடி அதிகாரிகளுக்கு பணிந்து நடக்க வேண்டும் என்ற நெருக்கடியால் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 04.00 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.04.01 19:17:38 +0530